21.04.2025 S.C.No.138 of 2017 P.W.51 – Govindhasamy

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு தொடர் குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.**

(A6 absent. And his absence condoned u/s 317 of Cr.P.C. petition filed and allowed. A1 to A5 present)

குறுக்கு விசாரணை தொடங்கிய நேரம் மதியம் 03.30 P.M.

**1ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

கே: தங்களால் பதிவு செய்யப்பட்டுள்ள அலி அக்பரின் கு.வி.மு.ச. பிரிவு 161 வாக்குமூலத்தில் கீழிருந்து 13 வது வரியில் "இது சம்பந்தமாக நான் நடவடிக்கை எடுக்கச்சொல்லி ஆம்பூர் நகர காவல் நிலையத்திடம் வந்திருந்த பள்ளிக்கொண்டா காவல் நிலைய பொறுப்பு ஆய்வாளர் வேப்பங்குப்பம் காவல் ஆய்வாளராகிய தங்களிடம் புகார் கொடுத்தேன்" என்று இருக்கிறதா என்றால்?

ப: இருக்கிறது. அவரை விசாரித்தபோது அவர் கொடுத்த வாக்குமூலம் ஆகும். வாக்குமூலத்தில் கீழிருந்து 13 வது வரியில் "இது சம்பந்தமாக நான் நடவடிக்கை எடுக்கச்சொல்லி ஆம்பூர் நகர காவல் நிலையத்திடம் வந்திருந்த பள்ளிக்கொண்டா காவல் நிலைய பொறுப்பு ஆய்வாளர் வேப்பங்குப்பம் காவல் ஆய்வாளராகிய தங்களிடம் புகார் கொடுத்தேன்" என்று உள்ளது. அந்த இரண்டு வரிகள் அடங்கிய திரு.K.M.அலி அக்பர் என்னிடம் கொடுத்த வாக்குமூலம் எ.ம.த.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

கே: தங்களால் சிபிசிஐடிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் 27 ஆவணங்களை இந்த நீதிமன்றத்தில் தங்களால் காண்பிக்க முடியுமா?

ப: சிபிசிஐடிக்கு அப்போது கொடுக்கப்பட்டது. நீதிமன்றத்திற்கு நான் அனுப்பவில்லை. சிபிசிஐடிக்கு கொடுத்தது உண்மை. அவர்கள் அனுப்பினார்களா என்று எனக்கு தெரியாது.

கே: ஆம்பூர் மருத்துவமனையில் ஷமீல் பாஷா சிகிச்சை பெற்ற நகல், ஆம்பூர் மருத்துவமனை உள்நோயாளி அனுமதி சீட்டு நகல், ஷமீல் பாஷா மருத்துவமனையில் சேர்ந்தது குறித்து ஆம்பூர் நகர காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்த நகல் இந்த மூன்றையும் எடுத்து காண்பியுங்கள்?

ப: மேலே சொல்லப்பட்ட மூன்று நகல் ஆவணங்களையும் நீதிமன்றத்தில் காவல் அறிக்கை (Charge Sheet) தாக்கல் செய்தபோது சிபிசிஐடி போலீசார் அதை தாக்கல் செய்யவில்லை.

கே: தங்களால் பதியப்பட்ட பதிலில் Sl.No.7 மாதிரி வரைபட நகல் நீதிமன்றத்தில் உள்ளதா?

ப: நீதிமன்றத்தில் இல்லை. மாதிரி வரைபட நகலை நான் சிபிசிஐடிக்கு அனுப்பிவிட்டேன்.

கே: ஆம்பூர் அரசு மருத்துவமனை சிகிச்சை பெற்றதற்கான Original ஆவணம் யாரால் ஆம்பூர் அரசு மருத்துவமனையிலிருந்து பெறப்பட்டது?

ப: யார் வாங்கியது என்று எனக்கு தெரியாது.

கே: ஆம்பூர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற ஆவணங்கள் எதிலிருந்து ஜெராக்ஸ் எடுக்கப்பட்டது?

ப: வழக்குக்கோப்பில் இருந்த நகலை அனுப்பி வைத்தேன். ஜெராக்ஸ் எதிலிருந்து எடுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது.

கே: ஒரு ஆவணத்தை குறிப்பாக ஆம்பூர் அரசு மருத்துவமனையில் ஷமீல் பாஷா பெற்ற சிகிச்சைக்கான ஆவணத்தின் Original ஐ வைத்துத்தானே ஜெராக்ஸ் எடுக்க முடியும் என்றால்?

ப: ஆம்.

கே: அப்படியானால் அந்த ஒரிஜினல் யாரிடம் இருந்தது?

ப: அது பற்றி எனக்கு தெரியாது.

கே: மேற்கண்ட ஆவணத்தின் ஒரிஜினல் யாரிடம் உள்ளது என்று கேட்டு ஏதேனும் ஆவணங்களில் பதிவு செய்துள்ளீர்களா?

ப: இல்லை.

கே: ஷமீல் பாஷாவை மருத்துவமனையில் சேர்த்தது குறித்து ஆம்பூர் நகர காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்த நகல் நீதிமன்றத்தில் உள்ளதா?

ப: இல்லை.

கே: அப்படியானால் தகவல் தெரிவித்த ஆவணத்தின் ஒரிஜினல் யாரிடம் உள்ளது?

ப: ஆம்பூர் நகர காவல் நிலையத்தின் இன்டிமேஷன் நகலை சிபிசிஐடிக்கு வழக்குக்கோப்பில் இருந்ததை அனுப்பி வைத்தேன்.

கே: ஆம்பூர் நகர காவல் நிலையத்தின் இன்டிமேஷன் நகலை எந்த ஒரிஜினலில் இருந்து ஜெராக்ஸ் எடுத்து யார் மூலமாக பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு எந்த தேதியில் எத்தனை மணிக்கு வந்தது என்பதையும் அதை யார் பெற்றது என்பதையும் தெளிவாக கூறுங்கள்?

ப: வழக்குக்கோப்பில் இருந்ததை நான் அனுப்பி வைத்தேன். நிலைய எழுத்தர் அதை வாங்கி வழக்குக்கோப்பில் வைத்திருந்தார். அதை நான் நேரடியாக பெறவில்லை. அது 01.07.2015 அன்று எங்கள் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் பெறப்பட்டது. நேரத்தை பொறுத்து எனக்கு நினைவில்லை. மேற்படி ஆஸ்பிடல் இன்டிமேஷன் என்னுடைய நிலைய எழுத்தர் பெற்றதை நான் வழக்குக்கோப்பில் பதியவில்லை. அந்த இன்டிமேஷனில் என்ன விவரங்கள் எழுதப்பட்டுள்ளன என்பதையும் நான் படிக்கவில்லை. அதை சிபிசிஐடியிடம் வழக்குக்கோப்பை ஒப்படைக்கும்போது கொடுத்தேன். அதனுடைய அசல் ஆம்பூர் நகர காவல் நிலையத்தில் இருக்க வேண்டும்.

கே: தாங்கள் கடந்த 16.04.2025 அன்று இந்த நீதிமன்றத்தில் குறுக்கு விசாரணையின்போது பதில் அளிக்கையில் 10 வது பக்கத்தில் கேள்விக்கு பதில் அளிக்கும்போது வரிசை எண் 5 மற்றும் 11 ஆகியவைகளில் இரண்டு வழக்கு நாட்குறிப்பின் நகல்கள் அனுப்பியதாக பதில் அளித்துள்ளீர்கள் அவைகள் இந்த நீதிமன்றத்தில் எடுத்து காட்டுங்கள்?

ப: முதல் தகவல் அறிக்கை பதிந்த அன்று ஒரு வழக்கு நாட்குறிப்பேட்டை நான் ஆரம்பித்து வழக்கை பதிந்து முதல் தகவல் அறிக்கையை நான் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்னிட்டு வழக்குக்கோப்பை சிபிசிஐடியிடம் 01.07.2015 அன்று ஒப்படைத்தபோது மற்றோரு வழக்கு நாட்குறிப்பேட்டை குறிப்பு எழுதி வழக்குக்கோப்பை அவர்களிடம்

ஒப்படைத்தேன். அதைத்தான் இரண்டு வழக்கு நாட்குறிப்பு என்று நான் குறிப்பிட்டுள்ளேன். நான் அனுப்பியது ஒரு வழக்கு சம்பந்தப்பட்ட ஒரு வழக்கு நாட்குறிப்புதான். வழக்கு நாட்குறிப்பு ஒன்றுதான்.

கே: அந்த ஒரு வழக்கு நாட்குறிப்பையாவது இந்த நீதிமன்றத்தில் காட்டுங்கள்?

ப: இந்த நீதிமன்றத்தில் இல்லை.

கே: 01.07.2015 நீதித்துறை நடுவர் எண்.5 க்கு அனுப்பிய 17 ஆவணங்களில் 14 வது ஆவணம் என்ன என்று படித்து சொல்லுங்கள்?

ப: மாதிரி வரைபட நகல் என்று குறிப்பிட்டுள்ளேன். ஆனால் நான் அனுப்பியது உண்மை நகல் அசல் ஆவணம் ஆகும்.

கே: 01.07.2015 அன்று நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட வரிசை எண் 14 ல் அசல் ஆவணம் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால்?

ப: இல்லை. ஆனால் அசல் ஆவணத்தைதான் அனுப்பி வைத்தேன்.

கே: 01.07.2015 அன்று நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட வரிசை எண் 14 ல் அசல் ஆவணத்தை அனுப்பி வைத்தேன் என்று குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளதா என்றால்?

ப: இல்லை.

கே: நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பட்டியல் ஆவண் எண் 9 ல் நகல்தான் அனுப்பியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அசல் ஆவணம் அனுப்பப்படவில்லை. ஆனால் அனுப்பப்பட்டதாக இந்த நீதிமன்றத்தில் பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பட்டியல் ஆவண எண் 11 அ.த.சா.ஆ.80 ஐ தாங்கள்தானே தயார் செய்தீர்கள் ?

ப: ஆமாம்.

கே: ஆம்பூர் மருத்துவமனையில் ஷமீல் பாஷா 19.06.2015 மாலை 16.30 மணிக்கு உள்நோயாளியாக சேர்க்கப்பட்டு பின்னர் உள்நோயாளி சிகிச்சை பிரிவிலிருந்து Absconding ஆனது குறித்து தாங்கள் சிபிசிஐடிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் மருத்துவ சிகிச்சை ஆவணத்தில் இருந்ததா?

ப: எனக்கு தெரியாது.

கே: அந்த ஆம்பூர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற ஆவணத்தை பார்த்தீர்களா?

ப: அந்த ஆவணத்தை நான் ஆவணத்தை இருந்ததை பார்த்தேன். அதில் இருந்ததை நான் படிக்கவில்லை.

கே: முதல் புலன் விசாரணை அதிகாரியான நீங்கள் ஆவணத்தை படிக்காமலும் அதில் உள்ள தகவல்களை முறையாக பதிவு செய்யாமலும் ஷமீல் பாஷா உள்நோயாளி சிகிச்சையிலிருந்து Absconding ஆனது குறித்து எவ்வித புலன் விசாரணை செய்யாமலும் இருந்ததாக இந்த நீதிமன்றத்தில் வேண்டுமென்றே பொய் சாட்சி சொல்கிறீர்கள் என்றால் ?

ப: சரியல்ல.

கே: குறிப்பாக ஒரு உள்நோயாளி மருத்துவமனையிலிருந்து Absconding ஆனால் மருத்துவமனை யாருக்கு தகவல் கொடுக்கும்?

ப: மருத்துவமனையின் எல்லையில் உள்ள காவல் நிலையத்தில்.

கே: ஆம்பூர் அரசு மருத்துவமனை எந்த காவல் நிலைய எல்லையில் உள்ளது?

ப: ஆம்பூர் நகர காவல் நிலைய எல்லையில் உள்ளது.

கே: 19.06.2015 இரவு மற்றும் 20.06.2015 மாலை 04.00 மணி வரை ஷமீல் பாஷா மருத்துவமனையிலிருந்து Absconding ல் இருந்தார் என்ற தகவல் ஆம்பூர் நகர காவல் நிலையத்திற்கு கிடைக்கப்பெற்றதா என்று தாங்கள் புலன் விசாரணை செய்தீர்களா?

ப: இல்லை.

கே: ஆம்பூர் நகர காவல் நிலையத்திற்கு மருத்துவமனையிலிருந்து ஷமீல் பாஷா Absconding ஆனது குறித்து தகவல் கிடைத்தால் ஆம்பூர் நகர காவல் நிலையம் என்ன செய்ய வேண்டும்?

ப: சம்பந்தப்பட்ட மருத்துவரிடம் புகார் வாங்கி வழக்கு பதிவு செய்ய வேண்டும்.

(இடைவேளை மாலை 05.20 மணி)

இடைவேளை முடிந்து மீண்டும் விசாரணை தொடங்கிய நேரம் மாலை 05.25 மணி

கே: ஆம்பூர் நகர காவல் நிலையத்தில் ஷமீல் பாஷா ஆம்பூர் அரசு மருத்துவமனையிலிருந்து Absconding ஆனது குறித்து முதல் தகவல் அறிக்கை ஏதேனும் பதிவு செய்யப்பட்டதா என்று தாங்கள் விசாரணை செய்து பதிவு செய்துள்ளீர்களா ?

ப: இல்லை.

கே: இறந்த ஷமீல் பாஷா நோயாளியாக ஆம்பூர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு Absconding ஆனதை பற்றி எதற்காக Absconding ஆனால் அதனுடைய பின்னணி

என்ன அதன் பின்னிட்டு என்ன அவருக்கு நடந்தது என்பதை பற்றி எந்த விதத்திலும் நான் விசாரித்து வழக்குக்கோப்பில் நான் பதிந்துள்ளேனா என்றால் ?

ப: அவ்வாறு எதையும் நான் விசாரிக்கவில்லை.

கே: கௌஷ் பாஷாவால் 26.06.2015 அன்று கொடுக்கப்பட்ட மூன்றாவது புகாரினையும் தங்களிடம்தான் கொடுத்ததாக அலி அக்பர் அவரது கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலத்தில் தங்களால் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால்?

ப: வாக்குமூலத்தில் அந்த மனுவையும் தங்களிடம் கொடுக்க வைத்தனர் என்று இருக்கிறது.

கே: 26.06.2015 மாலை ஆம்பூர் நகர காவல் நிலையத்தில் தாங்கள் இருக்கும்போது அலிஅக்பரால் கொடுக்கப்பட்ட புகாரினை பெற்று அதில் எதிரிகளின் பெயர்கள் இல்லை என்பதனால் தேதி குறிப்பிடாமல் வேறு ஒரு புகாரினை அலி அக்பரிடம் பெற்று வேண்டுமென்றே எதிரிகளை சிக்க வைக்க வேண்டும் என்று வழக்கு பதிவு செய்துள்ளீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: அலி அக்பரின் கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலத்தில் யாரால் எதிரிகளின் பெயர்கள் எழுதி கொடுக்கப்பட்டன என்பதனை தாங்களே மேற்கண்ட கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலத்தில் பதிவு செய்துவிட்டு அது குறித்து எவ்வித விசாரணையும் செய்யாமல் வேண்டுமென்றே தவிர்த்திருக்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: த.மு.மு.க கட்சியை சேர்ந்த ஷமீல் அகமது என்பவர்தான் எதிரிகளின் பெயரை எழுதி கையெழுத்து போடும்படி அலி

அக்பரை கட்டாயப்படுத்தி கையெழுத்து வாங்கினார்கள் என்பதை தாங்களே அலி அக்பரின் கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலத்தில் பதிவு செய்திருந்தும் மேற்கண்ட ஷமீல் அகமது மீது நடவடிக்கை எடுக்காமல் எதிரிகளை பழி வாங்க வேண்டும் என்ற ஷமீல் அகமதினுடைய அமைப்பிற்கு உறுதுணையாக செயல்பட்டிருககிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல

கே: மருத்துவமனையிலிருந்து பெறப்பட்ட ஆவணங்களை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்காமல் அவைகளை வேண்டுமென்றே சிபிசிஜடியிடம் கொடுத்ததாக சொல்லும் தாங்கள் மேற்கண்ட ஷமீல் பாஷாவின் மருத்துவ ஆவணங்களின் பொய்யான தகவல்களை திருத்தம் செய்து எதிரிகளை குற்றப்படுத்த வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு செயல்பட்டிருக்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: 15.06.2015 அன்று வழக்கின் எதிரிகள் எவரும் மரணம் அடைந்த ஷமீல் பாஷாவினுடைய வீட்டிற்கு சென்று அவரை விசாரணைக்கு அழைத்துவரவில்லை என்பது தங்களுக்கு தெரிந்திருந்தும் அதனை முறையாக பதிவு செய்யாமல் 15.06.2015 அன்று அழைத்து வந்ததாகவும் வழக்கின் எதிரிகள் விசாரணை செய்ததாகவும் நீதிமன்றத்தில் பொய்யான தகவல் கொடுத்திருக்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: 19.06.2015 மாலை 04.30 மணிக்கு போடப்பட்ட விபத்து பதிவேட்டில் AR ல் எத்தனை காயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன என்று தாங்கள் புலன் விசாரணை செய்து கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலம் பதிவு செய்தீர்களா?

ப: இல்லை.

கே: மேற்கண்டவாறு விபத்து பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள காயங்களின் எண்ணிக்கையை சென்னை இராஜிவ் காந்தி அரசு பொது மருத்துவமனை ஆவணங்களோடு ஒப்பிட்டு பார்த்து எவ்வாறு அதிக எண்ணிக்கையிலான காயங்கள் ஏற்பட்டிருக்கும் என்பது குறித்து புலன் விசாரணை செய்து அதனை பதிவு செய்தீர்களா ?

ப: இல்லை.

கே: 16.06.2015 ஷமீல் பாஷாவால் கொடுக்கப்பட்ட வாக்குமூலத்தினை சிபிசிஐடியிடம் கொடுத்து வேண்டுமேன்றே எதிரிகளை வழக்கில் சிக்க வைக்க வேண்டும் என்று தொடர்பு இல்லாத ஆவணத்தை சிபிசிஐடியிடம் கொடுத்து புலன் விசாரணையை திசை திருப்ப முயற்சி செய்திருக்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: அலி அக்பரின் வாக்குமூலத்தில் ஷமீல் அகமது என்பவர் வழக்கின் எதிரிகளின் பெயரை வேண்டுமென்றே எழுதி கட்டாயப்படுத்தி கையெழுத்து வாங்கினார் என்பது

தெரிந்திருந்தும் அவர் மீது வழக்கு தொடராமல் அவரால் பல்வேறு கலவரங்கள் செய்ய தாங்கள்தான் வித்திட்டிருக்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: 01.07.2015 அன்று வேண்டுமென்றே ஒரு பகுதி ஆவணங்களை நீதிமன்றத்திற்கு அனுப்பிவிட்டு என்னென்ன ஆவணங்களில் திருத்தம் செய்து வழக்கின் எதிரிகளை சிக்க வைக்கலாம் என்று சிபிசிஐடியும் தாங்களும் திட்டமிட்டு அவைகளை மட்டுமே சிபிசிஐடிக்கு கொடுத்து தாங்களே வழக்கின் எதிரிகள் மீது பொய்யாக வழக்கு புனைவதற்கு துணை போயிருக்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: ஆம்பூர் மருத்துவமனை ஆவணங்களில் பொய்யான திருத்தம் செய்வதற்கு துணை போயிருக்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: ஆம்பூர் மருத்துவமனை ஆவணங்களை நீதிமன்றத்திற்கு 01.07.2015 அன்றே அனுப்பியிருந்தால் ஆம்பூர் மருத்துவமனையில் ஷமீல் பாஷா பெற்ற சிகிச்சைக்கான பதிவுகளில் திருத்தம் செய்து வழக்கின் எதிரிகளை சிக்க வைக்க இயலாத நிலை ஏற்பட்டிருக்கும் என்றால்?

ப: சரியல்ல.

கே: பவித்ரா என்ற பெண் காணாமல் போனது குறித்து உயர் நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனு பவித்ராவின் கணவர் போட்டது குறித்தும் அது தொடர்பாக ஷமீல் பாஷாவை அவரது மாமனார் கௌஷ் பாஷா பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில்

கொண்டு வந்து ஒப்படைத்தார் என்பதனை மறைத்து இந்த நீதிமன்றத்தில் பொய் சாட்சி சொல்லியிருக்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: ஷமீல் பாஷாவை அவரது மாமனார் விசாரணைக்காக கொண்டுவந்து சமர்ப்பித்ததும் பிறகு ஷமீல் பாஷாவை நல்ல முறையில் அழைத்துச்செல்கிறேன் என்று அவரின் மாமனார் கௌஷ் பாஷா எழுதி கொடுத்துவிட்டு ஷமீல் பாஷாவை 19.06.2015 மதியம் 01.00 மணிக்கு அழைத்துச்சென்றார் என்பதனை பள்ளிக்கொண்டா காவல் நிலைய எஸ்எஸ்ஐ ரவியிடம் கேட்டு பதிவு செய்தீர்களா?

ப: இல்லை.

கே: எஸ்எஸ்ஐ ரவியிடம் கேட்டு கௌஷ் பாஷா அவரது மருமகன் ஷமீல் பாஷாவை நல்ல முறையில் அழைத்துச்செல்கிறேன் என்பதனை எழுதிக்கொடுத்த Bindover note–ஐ நீதிமன்றத்திற்கு அனுப்பிய நீங்கள் எஸ்எஸ்ஐ ரவியிடம் கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலம் பதிவு செய்யாதது ஏன்?

ப: அப்போது எஸ்எஸ்ஐ ரவி அயல்பணிக்காக சென்றுவிட்டார். அதனால் விசாரிக்கவில்லை.

கே: எஸ்எஸ்ஐ ரவி 26.06.2015 முதல் 01.07.2015 வரையிலான தங்களது புலன் விசாரணை காலத்தில் மேற்கண்ட எஸ்எஸ்ஐ ரவி எந்த பணிக்கு எங்கு சென்றிருந்தார் என்பதனை டியூட்டி ரோஸ்டரை பார்த்து சொல்லுங்கள்?

ப: எஸ்எஸ்ஐ ரவிக்கான வெளிப்பணிகளுக்கு சென்றதாக ரப் டியூட்டி ரோஸ்டர் பட்டியல் ஆவண் எண் 38ல் எங்கும் குறிப்பிடப்படவில்லை.

கே: Rough Duty Roaster மற்றம் Duty Roaster ல் அயல்பணி என்ன என்று குறிப்பிடவில்லை. பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் அவருக்கு பணி ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் ?

ப: சரிதான்.

கே: மேற்கண்ட எஸ்எஸ்ஐ ரவியிடம் விசாரித்து கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலம் பதிவு செய்திருந்தால் வழக்கினுடைய உண்மை தன்மை தெரிந்திருக்கும் ஆனால் அவ்வாறு புலன் விசாரணை செய்யாமல் பொய்யான தகவல்களை பதிவு செய்து வழக்கின் எதிரிகளை பொய்யாக வழக்கில் சிக்க வைத்திருக்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: 16.06.2015 முதல் 19.06.2015 வரை ஆம்பூர் டிஎஸ்பி கணேசன் அவர்களின் தலைமையில் அயற்பணியில் (சேடோ டியூட்டி)–ல் வழக்கின் எதிரிகள் பணியாற்றினார்கள் என்பது தங்களுக்கு தெரிந்திருந்தும் அதனை மறைத்து பொய்யான தகவல்களை உருவாக்கி வழக்கின் எதிரிகளை பொய் வழக்கில் சிக்க வைத்திருக்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: 01.07.2015 அன்று தங்களால் நீதித்துறை நடுவர் எண்.5 க்கு அனுப்பப்பட்ட 17 ஆவணங்களில் 14, 15, 16 மற்றும் 17 ஆகிய வரிசை எண் தங்களின் கைப்பட எழுதியிருக்கிறீர்கள் என்றால்?

ப: சரிதான்.

கே: வழக்கின் எதிரிகளின் பெயர்களை புகார்தாரர் அலி அக்பர் எவ்வாறு தெரிந்துக்கொண்டார் என்பதை தாங்களே அலி அக்பரின் கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலத்தில் பதிவு

செய்திருந்தும் வழக்கின் எதிரிகள் ஷமீல் பாஷாவின் மரணத்திற்கு காரணம் என பொய்யான தகவல்களை உருவாக்கி பொய்யான வழக்கு போட்டுள்ளீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: த.மு.மு.க. ஷமீல் அகமது என்பவர்தான் வழக்கின் எதிரிகளின் பெயரை கூறினார் என்பது தங்களுக்கு தெரிந்திருந்தும் மேற்கண்ட த.மு.மு.க. ஷமீல் அகமதுவுக்கு வழக்கின் எதிரிகளின் பெயர்கள் யாரால் கொடுக்கப்பட்டது என்பதனை புலன் விசாரணை செய்திருக்கிறீர்களா?

ப: புகார் கொடுக்கப்பட்டதின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அலி அக்பர் கொடுத்த வாக்குமூலத்தை பதிவு செய்தேன். எதிரிகளின் பெயர்கள் யாரால் கொடுக்கப்பட்டது என்பதனை நான் விசாரிக்கவில்லை.

கே: த.மு.மு.க. ஷமீல் அகமது என்பரின் அழுத்தத்தின் காரணமாக தாங்களே எதிரிகளின் பெயர்களை அவருக்கு கொடுத்து அதை தேதியிடப்படாமல் புகார் எழுதி கொண்டுவரும்படி பணித்ததின் பேரில் இரண்டாவது புகாரை தாங்களே ஆம்பூர் நகர காவல் நிலையத்திலேயே பெற்று அதன் மீது பொய்யான வழக்கு பதிவு செய்திருக்கிறீர்கள் என்றால்?

ப: மறுக்கிறேன்.

கே: வழக்கின் எதிரிகளின் பெயர்களை தாங்களே த.மு.மு.க. ஷமீல் அகமதுவுக்கு கூறி தேதியிடப்படாத புகாரினை அலி அக்பரிடமிருந்து மிரட்டி கையொப்பம் போடச்சொல்லி புகாரினை பெற்று பொய்யான வழக்கு பதிவு செய்திருப்பதால் எதிரிகளின்

பெயர்களை யார் த.மு.மு.க. ஷமீல் அகமதுவுக்கு கூறினார்கள் என்று கோணத்தில் தாங்கள் புலன் விசாரணை செய்யவில்லை என்றால்?

ப: மறுக்கிறேன்.

கே: வழக்கின் எதிரிகள் அனைவரும் வெவ்வேறு காவல் நிலையங்களை சேர்ந்தவர்கள் என்றும் அவர்கள் அனைவரும் ஆம்பூர் டிஎஸ்பி அவர்களின் ஆணைப்படி செம்மரக்கடத்தல் வழக்கில் தொடர்புடைய டிஎஸ்பி தங்கவேல் அவர்களை போலீஸ் கஸ்டடியில் எடுத்து விசாரணை செய்யும்போது டிஎஸ்பி தங்கவேல் அவர்களை காவல் செய்யும் பணியில் இருந்ததை தாங்கள் டிஎஸ்பி கணேசன் அவர்களை விசாரித்து கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலம் பதிவு செய்தீர்களா?

ப: இல்லை.

கே: முறையான புலன் விசாரணை செய்யாமல் வழக்கு எதிரிகளின் மேல் அதிகாரிளிடம் கூட வாக்குமூலம் பதிவு செய்யாமல் தேதியிடப்படாத பொய்யான தகவலை பெற்று பொய்யான வழக்கு பதிவு செய்திருக்கிறீர்கள் என்றால் ?

ப: சரியல்ல.

கே: ஷமீல் பாஷாவை நல்லமுறையில் அழைத்துச்சென்ற அவரது மாமனார் 19.06.2015 பகல் 01.00 மணி முதல் மாலை 04.30 மணி வரை ஷமீல் பாஷாவை எங்கு வைத்திருந்தார் எவ்வாறு காயப்படுத்தினார் என்பதனை கௌஷ் பாஷாவிடம் தேதியையும் நேரத்தையும் குறிப்பிட்டு கேட்டு புலன் விசாரணை செய்தீர்களா?

ப: இல்லை.

கே: 19.06.2015 இரவு முதல் 20.06.2015 மாலை 04.00 மணி வரை உள் சிகிச்சை பிரிவில் இருந்து காணாமல் போன Absconding ஆன ஷமீல் பாஷாவிற்கு மேற்கண்ட கால இடைவேளையில் என்ன நிகழ்ந்தது என்ற கோணத்தில் புலன் விசாரணை செய்தீர்களா?

ப: இல்லை.

கே: ஷமீல் பாஷாவினுடைய மரணம் குறித்த தகவல்களுக்கு 16.06.2015 முதல் 19.06.2015 மாலை 04.30 மணி வரை நிகழ்ந்த விசாரணைக்கு உரிய தொடர் ஆவணங்கள் (Chain of Documents) எவை எவை என தொகுத்து புலன் விசாரணை செய்தீர்களா?

ப: இல்லை. 19.06.2015 அன்று ஷமீல் பாஷாவை Bindover செய்த ஒப்புதல் சீட்டு ஆவணத்தையும் அதற்கு முன்பு பவித்ரா காணாமல் போன வழக்கு தொடர்பாக இறந்துபோன ஷமீல் பாஷாவிடம் வாக்குமூலம் பெற்ற ஆவணத்தையும் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். இது சம்பந்தமாக தொகுத்து புலன் விசாரணை செய்யவில்லை.

கே: 15.06.2015 அன்று வழக்கின் எதிரிகள் ஷமீல் பாஷாவின் வீட்டிற்கு செல்லவும் இல்லை அவரை அழைத்து வரவும் இல்லை ஆனால் அவ்வாறு அழைத்து வந்ததாக தாங்கள் பொய் வழக்கு பதிவு செய்து இல்லாத ஒன்றை இருப்பது போல் புலன் விசாரணை செய்திருக்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை தாங்கள் பொய் வழக்கு தொடர்ந்திருக்கிறீர்கள் மேலும் சிபிசிஐடி

கேட்டுக்கொண்டதற்கு இணங்க உண்மைக்கு மாறாக இந்த நீதிமன்றத்தில் பொய் சாட்சி கூறியிருக்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

**2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்.

**5 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

**விசாரணை முடிவுற்ற நேரம் மாலை 06.35 மணி**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.04.21 18:57:07 +0530